# இயல் 7.1 - எண்ணியல்

பயிற்சி எண் :: 7.1.5.3.E

எண்ணியல் - தசம எண்களின் பெருக்கல் - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - பயிற்சி

## எண்ணியல் - தசம எண்களின் பெருக்கல் - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - பயிற்சி

1) பூபதி வாங்கிய ஒரு பந்தின் விலை ₹12.50. மணிமாறன் அதே போல் 10 பந்துகளை வாங்க விரும்புகிறான் எனில், அவனுக்குத் தேவைப்படும் மொத்தத் தொகை எவ்வளவு?

பூபதி வாங்கிய ஒரு பந்தின் விலை = ₹12.50

மணிமாறன் வாங்க விரும்பிய பந்துகளின் எண்ணிக்கை = 10

∴ மணிமாறனுக்குத் தேவைப்படும் மொத்தத் தொகை = 12.5 × 10 = ₹125.0

∴ மணிமாறனுக்குத் தேவைப்படும் மொத்தத் தொகை **₹125** ஆகும்.

2) துரையின் மகிழுந்தின் சக்கரம் ஒரு முழுச் சுற்றுக்கு 1.325 மீ தூரத்தைக் கடக்கிறது எனில், 100 சுற்றுகளில் கடக்கும் தொலைவைக் கணக்கிடுக.

துரையின் மகிழுந்தின் சக்கரம் ஒரு முழுச் சுற்றுக்கு கடக்கும் தொலைவு = 1.325 மீ

∴ துரையின் மகிழுந்தின் சக்கரம் 100 சுற்றுக்கு கடக்கும் தொலைவு = 1.325 × 100 = 132.5 மீ

∴ துரையின் மகிழுந்தின் சக்கரம் 100 சுற்றுக்கு கடக்கும் தொலைவு **132.5 மீ** ஆகும்.

3) கீழ்க்காணும் வினாக்களுக்கு அலகு மாற்றம் செய்க.

(i) 5.961 கிலோமீட்டரை மீ - ல் மாற்றுக.

1 கி.மீ = 1000 மீ

5.961 கி.மீ = 5.961 × 1000 = 5961 மீ

5.961 கி.மீ = **5961 மீ**

(ii) 3.8627 லிட்டரை மில்லி லிட்டரில் மாற்றுக.

1 லி = 1000 மி.லி

3.8627 லி = 3.8627 × 1000 = 3862.7 மி.லி

3.8627 லி = **3862.7 மி.லி**

(iii) 8.43 கிலோகிராமை கிராமாக மாற்றுக.

1 கி.கி = 1000 கி

8.43 கி.கி = 8.43 × 1000 = 8430 கி

8.43 கி.கி = **8430 கி**

(iv) 7.42 மீட்டரை செ.மீ - ல் மாற்றுக.

1 மீ = 100 செ.மீ

7.42 மீ = 7.42 × 100 = 742 செ.மீ

7.42 மீ = **742 செ.மீ**

## இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/ESf7aXQqf5w


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Friday 7th October, 2022 :: 04:46 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**